# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 15 April 2022

### *PASTORAL STAFF:*

**Fr. Charles W. Collins**
*Pastor*

**Fr. Guymar F. Canisius Raj**
*Associate Pastor*

**Fr. Peter Gitendran**
*Residence*

**Maureen Rajadurai**
*Parish Secretary*

### *MASS SCHEDULE:*

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesdays:** | **7:30 pm** |
| **First Fridays:** | **7:30 pm** |

### *ONLINE STREAMING SITES:*

**https://www.olghtamilparish.com/**
**https://www.facebook.com/OLGHTamilParish**
**https://www.youtube.com/olghtamilparish**
**OLGH TV (Eagle TV - 977 & Star TV 1450)**

### *OUR LADY OF GOOD HEALTH PARISH*

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |





### குடும்பங்களைப் பதிவு செய்தல்

ரொறன்ரோ மறைமாவட்ட வழக்கப்படி, திருமுழுக்கு, முதல்நன்மை, உறுதிபூசுதல், திருமணம் போன்ற திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளவும், உங்களது பிள்ளைகளை கத்தோலிக்க பாடசாலையில் சேர்ப்பதற்கும், கத்தோலிக்க பங்கு ஒன்றில் உங்கள் குடும்பத்தைப் பதிவுசெய்திருத்தல் அவசியமானது. அதற்கான உங்கள் தெரிவு எமது தமிழ் கத்தோலிக்க பங்காக இருந்தால், சமய அறிவோடு தமிழ் மொழி, பண்பாடு, விழுமியங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதை மறக்காதீர்கள்.

**கடவுளிடமிருந்து தங்களை அந்நியமாக்கிக்கொள்ளும் வழிகளைத் தேடுகின்ற, எதற்கும் அடங்கமறுக்கும் நம் இதயங்களை, மன்னிப்பு மற்றும் அமைதி ஆட்சிசெய்ய கடவுளை வேண்டுவோம்.**

**- திருத்தந்தை பிரான்சிஸ்**

## எமது பங்குத்தந்தையின் உள்ளத்திலிருந்து



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

உங்கள் அனைவருக்கும், அருட்பணி பீற்றர் ஜித்ரேந்திரன், அருட்பணி கனீசியஸ்ராஜ் ஆகியோரோடு இணைந்து, மகிழ்ச்சியான கிறிஸ்து உயிர்ப்புநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நிறைவடைகிறேன். உயிர்த்த இயேசுவின் அன்பும் மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் இதயங்களிலும் உங்கள் வீடுகளிலும் நிறைவாகத் தங்கட்டும்.

நன்மை செய்வதில் சோர்ந்து போகாதீர்கள் என்பதே இவ்வருடத்திற்கான செய்தியாகவும் உங்களுக்கான தீர்மானமாகவும் தர விரும்புகிறேன். தியாகம், விரதம், கருணை, தொண்டு செய்தல், அடுத்தவர்க்கு உதவுதல் உட்பட, தினமும் செபிப்பது போன்ற நல்ல காரியங்களைச் செய்வதில் சோர்ந்து போகாமல் தீவிரமாக இருப்பதே, இந்த தவக்கால பரித்தியாகங்களின் முடிவில் நீங்கள் எடுக்கின்ற நல்ல முடிவாக, மிக முக்கியமான தீர்மானமாக, இருக்க வேண்டுமென்று ஆசிக்கின்றேன்.

தொற்றுநோய் பரவலும் கோவிட் மாறுபாடுகளும் நமது அன்றாட வாழ்வில் கூடுதல் போராட்டங்களையும் துயரத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. தாயகத்திலும் எமது மக்கள் படும் துன்பம் ஓய்ந்தபாடாக இல்லை. அவர்களையும் எமது செபத்தில் நினைத்து, அவர்களது இன்னல்களில் ஆறுதல் வழங்க முயற்சிப்போம். இயேசுவோடு வாழ்வதற்கு அதிக நேரத்தை ஒதுக்குவோம். துன்பங்கள் நீங்கி, ஆரோக்கியமான வாழ்வும், நிறைவான ஆசீர்வாதங்களும் உங்கள் வீடுகளிலும் குடும்பங்களிலும் நிலைத்திட உயிர்த்த இயேசுவிடம் விசேடமாக நாம் தினமும் உங்களுக்காக வேண்டுகிறோம்.

நீங்கள் தொடர்ந்து செய்துவரும் அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகளுக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். உங்கள் நேரத்தையும், திறமையையும், அன்பளிப்புகளையும் இறைவனுக்குக் கொடுப்பது, பன்மடங்காக பலனைத் தரும் என்ற நம்பிக்கையுடன் நீங்கள் தரும் தாராள உதவிகள் அனைத்திற்கும் நன்றி. திட்டமிடல், ஒருங்கிணைத்தல், அலங்கரித்தல், நேரடி ஒளிபரப்பு, சுத்தப்படுத்துதல் உட்பட, பல்வேறு வகையிலும் எமக்கு உதவிய அனைவருக்கும், ஆலய நிர்வாக சபை, தன்னார்வத்தொண்டர்கள், பாடகர் குழாம், பீடப்பணியாளர், மரியாயின் சேனை, நற்கருணைப்பணியாளர்கள், வாசகர்கள், Catechists/Children's Liturgy Leaders, இளையோர், தொழில்நுட்பக்குழு, நிதி மற்றும் நிர்வாக உதவியாளர்கள், நைற்ஸ் ஒப் கொலம்பஸ் உறுப்பினர்கள் போன்ற அனைவருடைய அனைத்துச் சேவைகளுக்கும் நன்றி. உயிர்த்த இயேசு உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பங்களையும் மென்மேலும் நன்மைகளால் நிரப்ப ஆசிக்கிறேன்.

மேலும் நமது பங்கின் பல்வேறு செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும், குறிப்பாக திரைக்குப் பின்னால் அமைதியாகப் பணிபுரியும் அனைவருக்கும், பெயர் குறிப்பிடாமல் ஆலயத்தின் தேவைகளுக்கு உதவும் அனைவருக்கும் இறையாசீர் நிறைந்த நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

உங்கள் குடும்பம், அமைதி, மகிழ்ச்சி மற்றும் இறையன்பால் நிரப்பப்பட வேண்டும். என் அன்பான பங்குமக்கள் அனைவர் மீதும் உயிர்த்த இயேசுவின் ஆசீர்வாதம் நிறைவாகத் தங்கிடட்டும். எனது ஈஸ்ரர் வாழ்த்துக்களுடன்,

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*

---

## தூய அந்தோனியார் பெருவிழா - ஆனி 13

தூய அந்தோனியார் திருநாளுக்கான ஆயத்த நவநாள் வழிபாடுகள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் மாலை 7:30 மணி நடைபெறும்



## இளையவர் குழுவைப் பலப்படுத்துவோம்!

தூய ஆரோக்கிய அன்னைப் பங்கின் எதிர்காலம் எமது இளையவர்கள், மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எமது பங்கின் வளர்ச்சிக்கு மொழி ஒரு தடையல்ல. எனவே, உங்கள் குடும்பத்திலுள்ள இளையவர்களை எமது பங்கின் செயற்பாடுகளிலும் வழிபாடுகளிலும் வளர்ச்சியிலும் ஈடுபாடும் அக்கறையும் கொள்வதற்கு ஊக்கம் கொடுப்பது, பெற்றோராகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எமது இளைஞர் குழு, தற்போது மிகுந்த அக்கறையுடனும் எழுச்சியுடனும் தங்களுக்குள் சிறந்த தொடர்புகளைப் பேணி மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறார்கள். தற்போது பிரதி சனிக்கிழமைகளில் மெய்நிகர் வழியில் சந்திப்பதுடன், செபமாலை சொல்வதற்கும் இணைந்து கொள்வதை நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். எமது இளையவர்களுக்கு நாம் இன்னும் அதிக வாய்ப்புக்களை அனைத்துப் பணிகளிலும் வழங்க முன்வரவேண்டும். பீடப் பணிகளிலும், வாசகர் மற்றும் நற்கருணை வழங்குவது உட்பட, இளையவர் பாடகர் குழாம் ஒன்றை இணைப்பதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். எமது ஆலயத்தின் வளர்ச்சி, இவர்கள் கையிலேயே தங்கியுள்ளது என்பதை மறக்காதீர்கள். எமது பங்கின் பணிப்பீடங்களைப் பலப்படுத்துவோம். குடும்பமாக இணைந்து எமது பங்கை வளர்ப்போம் வாருங்கள்.

---

## ENGAGING THE YOUTH

It’s no secret that churches often struggle to connect with kids and teens. A recent study found that only 8% of participants between the ages of 13 and 25 who are interested to involve in any kind of religious activities.

It’s time to consider new ways to engage the next generation of churchgoers. We need to ensure that they feel like they belong and then sustain this connection over time. Here are five best practices to build relationships and reliable connections with the youth in our church.

**1.** Be Sincere: Teenagers want to interact with adults who are genuine and honest. They’re not looking for an act or for someone who tries too hard to relate to them. Focus on Snapchat, Instagram, or TikTok to earn their attention is unnecessary. Younger members will be more comfortable if you act like someone your age, rather than trying to pass as a 16-year-old.

**2.** Involve Younger Members: The leaders and Team Leads believe that their role is to do ministry to young people rather than doing ministry ***with*** young people. This limited view should change. Young people–especially older teens–see that no one at the church is connecting with them or involving them. We are also missing out on the passion and creativity that youth bring to the table.

Asking teenagers to contribute based on their skills and interests can help them feel involved. Don’t just put out a general call for volunteers–ask teens to help out in areas that you know match their interests. Reach out to them. Good things happen when you do this. And, they feel more like a part of the church.

**3.** Create an Inviting Culture: A research finds two reasons why youngsters are not attending religious services, and they were: “I haven’t found a church I like” and “I don’t feel welcomed.”

We might speak at length about worship, prayer, communion, and baptism and assume everyone knows what is happening. Think through a young member who has no church background…all of those things are new to them. Let’s be honest: do you explain to them so they understand?

Did we ever let a youth from the church family to explain in their own way what was going to happen in the church that day? The idea is to let people know why they’re singing, the words they’re reading, and why worship is essential. New people will understand, and your service will feel way more inviting.

**4.** Communicate the Way Young Members Want You to Communicate:
A recent survey suggests that churches that use text messaging to communicate with their members experience tremendous growth. This positive growth in membership might be partly explained by the fact that young members want to communicate by text. This survey confirms

that Millennials spending a minimum of 3.42 hours on their phones a day.

**5.** Update Your Programming: Research shows that people aren't bored in eight seconds–they simply want to be engaged in eight seconds. One way that youth workers are handling this is by focusing on small groups. They help teens bond with each other by removing participation barriers that can exist in larger group settings.

There's no one silver bullet when it comes to engaging youth in your church. If anything, the world keeps changing. But by focusing on creating an involved, inviting culture that communicates the way our audience wants you to, you can make leaps and bounds in engaging our younger members.

## தேவ அழைத்தல்

எம் குடும்பங்களில் தேவ அழைத்தல் உருவாக முயற்சி எடுப்போம், அதற்காக செபிப்போம். பீடத்தை அலங்கரிக்கும் குருக்களாக அல்லது டீக்கன்களாக எமது பிள்ளைகளும் உருவாக உற்சாகம் கொடுப்போம். அழைத்தலின் விளைநிலம் குடும்பமே. அழைத்தலுக்கான ஆர்வத்தை பிள்ளைகளிடம் உருவாக்குவது பெற்றோரே. உங்கள் பிள்ளையிடம் இதற்கான ஆர்வம் இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். எத்தகைய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பது குறித்து உரையாடலாம்.

## தவக்கால விசேட வழிபாடுகள்

இத்தவக்காலத்தில் தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நடைபெற்ற வழிபாடுகள் பற்றி உங்களுக்கு அறியத்தர விரும்புகிறேன்.

தவக்காலம் முழுவதும், தினமும் காலையில் 7:00 மணிக்கு நற்சிந்தனையும் மாலையில் 7:30 மணிக்கு தவக்கால தியானம், வழிபாடு, சிந்தனை, திருப்பலி நற்கருணை ஆசீர்வாதம் போன்றவை நேரலையாகவும் ஆலயத்திலும் இடம்பெற்றன. எமது ஆலய குருக்கள் மட்டுமல்லாது, ஒன்ராரியோ மாகாணத்தில் பணியாற்றும் தமிழ் குருக்களும் நேரில் கலந்துகொண்டு தவக்கால தியான வழிபாடுகளை நடாத்தியிருந்தார்கள். அத்துடன், தாயகத்தின் தமிழ் மறைமாவட்டங்களிலிருந்தும் குருக்கள், குரு முதல்வர்கள் தங்களது ஆசிகளையும், தியான வழிபாடுகளையும் வழங்கினார்கள். அனைவருக்கும் எமது பங்கு மக்கள் சார்பாக மனம் நிறைந்த நன்றியையும் வாழ்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பங்கின் பல்வேறு பணிகளுக்கும் புதியவர்கள் நியமனம்

தூய ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கில் எனது பணியை ஆரம்பித்து, தற்போது 3 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், நான் இந்த ஆலயத்தின் பணிகளைப் பொறுப்பேற்றபோது அறிவித்ததன்படி, எமது ஆலயத்தில் செயற்பட்டுவருகின்ற ஆலய நிர்வாக சபை, தன்னார்வத்தொண்டர்கள், பாடகர் குழாம், பீடப்பணியாளர், மரியாயின் சேனை, நற்கருணை பணியாளர்கள், வாசகர்கள், Catechists/Children's Liturgy Leaders, இளையோர், தொழில்நுட்பக்குழு போன்ற அனைத்து செயற்பாட்டுக் கட்டமைப்பிலும், புதியவர்களையும் இணைத்துக்கொண்டு, தொடர்ந்தும் எமது ஆலயத்தை வளர்ச்சிப்படியில் இட்டுச்செல்ல ஆயத்தங்களைச் செய்கிறோம். எதிர்வரும் மே மாதம் 15ம் திகதி, அனைத்துப் பணிகளுக்கும் புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதுடன், புதியவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற மகிழ்ச்சியான தகவலைத் தெரிவிக்கின்றேன்.

இந்த செயற்பாடுகளில் புதிதாக இணைந்துகொள்ள விரும்புவோர், தயவுசெய்து எமது இணையத்தளத்தில் இருக்கின்ற விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த விண்ணப்பப் படிவங்களை எமது ஆலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே இந்தக் குழுக்களில் பணியாற்றும் அனைவரும், அவசியம் இந்த விண்ணப்பப் படிவத்தை நிரப்புவது அவசியம். தற்போது இந்தக் குழுக்களில் செயற்படுபவர்கள் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி கையளிக்காதவிடத்து, அவர்கள் இந்தக் குழுக்களிலிருந்து தாமாக விலகிக் கொள்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்வோம். அதனால், தயவுசெய்து இந்த விண்ணப்பப் படிவத்தை, தற்போது பல்வேறு பணிகளில் உள்ளவர்களும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் நிரப்பி கையளிப்பது அவசியம். இதற்கான இறுதிநாள், ஏப்ரல் மாதம் 30ம் திகதி என்பதையும் அறியத்தருகிறேன்.

பீடப்பணியாளர்களாக, வாசகர்களாக அல்லது ஆலயத் திருத்தொண்டர்களாகப் பணியாற்ற விரும்புவோர், பாடகர் குழாமில் இணைந்து கொள்ள விரும்புவோர் ஏதாவதொரு இசைக்கருவியை எமது வழிபாட்டில் இசைக்க விரும்புவோர் உட்பட, எந்தவகையிலாவது எமது ஆலயத்தின் ஒன்றுபட்ட வெற்றியில் இணைந்து உழைக்க விரும்பும் அனைவரும், அத்துடன், ஏற்கனவே இணைந்து பணியாற்றிவருகின்ற அனைவரும், தயவுசெய்து இந்த விண்ணப்பப் படிவத்தை, இம்மாதம் ஏப்ரல் 30ம் திகதிக்கு முன்னர் நிரப்பி வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்